சூரியநல்லூர் கிராம ஊராட்சி தலைவர் / செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : S.வனிதாஸ்ரீ

ந.க.எண் : 1/2021-22 நாள் : 31.03.2022

பொருள் : மனைப்பிரிவு வரன்முறை திருப்பூர் மாவட்டம் குண்டடம் ஊராட்சி ஒன்றியம் சூரியநல்லூர் கிராம ஊராட்சி சூரியநல்லூர் கிராம க.ச.எண் :1231/2 ல் 4.89 ஏக்கர் (19779சமீ) பரப்பில் அமைந்த மனைப்பிரிவு 99 மனைகளை வரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை எண் : 71 ஊரக வளர்ச்சி துறை நாள் : 16.06.2003

2. அரசாணை எண் :79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3) நாள் : 04.05.2017

3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண் : 12201/2017/சிபி நாள் :28.09.2017

4. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), திருப்பூர் அவர்களின் ந.க.எண்: 1344/2020/திமா நாள் : 22.01.2022

****

உத்தரவு :

திருப்பூர் மாவட்டம், குண்டடம் வட்டாரம் சூரியநல்லூர் கிராம ஊராட்சி சூரியநல்லூர் கிராமம் க.ச.எண் : 1231/2 ல் 4.89 ஏக்கர் (19779சமீ) பரப்பளவில் புதியதாக அமைந்துள்ள 99 மனைகளுக்கு பார்வை 1 ல் காணும் அரசாணையில் குறிப்பிட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதியுள்ள குடியிருப்பு மனைபிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ (தி.மா) ஏண் : 27/2022 என்ற எண்ணிடப்பட்டு பார்வை 4ல் காணும் கடித்தின்படி தொழில்நுட்ப அளவிலான (Technical Approval) ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்கண்ட மனைகளுக்கு வழிகாடடு மதிப்பில் (MARKET VALUE) 3% கீழ்கண்டவாறு வரன் முறை கட்டணம் உரிய அரசுத்தலைப்பில் வங்கிக்கணக்கில் ரூ.77751(ரூபாய் ஏழுபத்தி ஏழாயிரத்து ஏழுநூற்றி ஐம்பத்தி ஒன்று) செலுத்துப்பட்டுள்ளது மற்றும் வளர்ச்சி கட்டணம் ஒவ்வொரு சென்டிற்கும் ரூ.500/- வீதம் 317 சென்டிற்கு ரூ.158500/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்தி எட்டாயிரத்த ஐநூறு மட்டும்) ஊராட்சி நிதிக்கணக்கில் செலுத்தப்பட்டும் பணம் வங்கியில் செலுத்தியதற்கான சலான் இணைக்கப்பட்டுள்ளது.

வ எண்	க.ச.எண்	ஏக்கர்/ சதுர அடி	வழிகாட்டி மதிப்பு ஏக்கர் க்கு ரூ. 530000/- வீதம்	வழிகாட்டு மதிப்பிற்கான வரன் முறைக் கட்டணம்
1.	1231/2	4.89 ஏக்கர் (19779சமீ)	2591700	77751

எனவே மேற்படி கட்டணங்கள் யாவும் பெறப்பட்டுள்ளதாலும் திருப்பூர்நகர ஊரமைப்பு துணை இயக்குனர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு வரைபடத்தில் உள்ளபடி பூங்கா பரப்பு 1448.55 ச.மீ . பொது உபயோகம் 85.59 ச.மீ மனைபிரிவு சாலை 5329.95 சதுர மீட்டர் தாராபுரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் : 6818/2021 நாள் : 19.08.2021 ன் படியும் மின் பகிரிமானத்திற்கான இடம் 87.14 ச.மீ தாராபுரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் : 6940/2021 நாள் : 24.08.2021 ன் படியும் ஊராட்சிக்கு தானக்கிரயம் வழங்கப்பட்டு விட்டாதலும் சூரியநல்லூர் கிராம ஊராட்சியில் புதிதாக அமைந்துள்ள 99 குடியிருப்பு மனைகளுக்கு பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்பட்டதை தொடர்ந்து தொழில்நுட்ப அளவிலான ஒப்புதல் (Technical Approval) வழங்கி உத்தரவிடப்பட்டதால் குடியிருப்பு மனைகளை வரன்முறைபடுத்தி மனை இட அனுமதி வழங்கி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

பார்வை 1 முதல் 4 வரையிலான அரசாணை மற்றும் கடித்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும்.

தலைவர் / செயல் அலவலர்
சூரியநல்லூர் கிராம ஊராட்சி

பெறுதல்,

1. திரு.R.செந்தில்குமார் மற்றும்
2. திரு.S.நிஷாந்த்
   எண் :25/C3
   கருவம்பாளையம்,
   மங்கலம் ரோடு
   திருப்பூர் -641604

நகல்

1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருப்பூர் அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருப்பூர்.
3. சார்பதிவாளர் அலுவலகம், தாராபுரம்.